**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : – திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7–ஆம் தேதி செவ்வாய்க்கிழமை**

**இ.ம.எண்.3/2021 இன் அ.வ.எண்.68/2021**

பாலசுப்ரமணியன் . . . மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. தமிழ்நாடு அரசு சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர்
2. மாவட்ட வருவாய் அலுவலர், கரூர்
3. வருவாய் கோட்ட அலுவலர், குளித்தலை
4. வட்டாட்சியர், தரகம்பட்டி
5. தொகுதி வளர்ச்சி அலுவலர், கடவூர் பஞ்சாயத்து யூனியன், தரகம்பட்டி
6. கடவூர் கிராம பஞ்சாயத்து அதன் பிரதிநிதியாக தலைவர், கடவூர்.

. . . எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில், கட்டளை 26 விதி 9 சி.பி.சி.–ன் படி, வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து சர்வேயர் உதவியுடன் மனுச்சொத்தின் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யகோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 29.04.2021 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 21.06.2025 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 07.04.2026 |
| மனுதாரருக்காக | : | திரு.D.வினோத் குமார் – வழக்கறிஞர் |
| எதிர்மனுதாரர்களுக்காக | : | திரு.T.K.நீலமேகம் – வழக்கறிஞர் |

**1) மனுவின் சுருக்கம் :–**

இம்மனுவின் மனுதாரர் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள் மீது அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருகிறது. கடந்த 1900 ஆண்டுகளில் இருந்து மனுச்சொத்தை

மனுதாரரின் முன்னோர்கள் வெளிப்படையாக யாருடைய இடையூறும் இன்றி அமைதியான முறையில் அனுபவம் செய்து வந்த நிலையில், மனுதாரரின் முன்னோர்கள் மேற்படி மனு சொத்தில் தென்னை மரங்கள் மற்றும் தெக்கு மரங்களை பயிரிட்டு மனுச்சொத்தின் ஒரு பகுதியை வீடு கட்டி அனுபவம் செய்து வந்துள்ளார். மேற்படி மனுச்சொத்தானது வாரி புறம்போக்கு. மனுச்சொத்தானது மனுதாரரின் அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபணம் செய்வதற்கு சர்வேயர் உதவியுடன் வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து மனுச்சொத்தின் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யகோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை எதிருரையாக பாவித்துக்கொள்ள கோரி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிருரையின் சுருக்கம் :-**

வாதியின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. வாதி வழக்கில் கூறியுள்ள சங்கதிகளை வாதியே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் ஆவார். கடந்த 19.08.2019-ம் தேதி முருகேசன் என்பவர் அரசு புறம்போக்கு நிலத்தை வாதியானவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் அதனை அகற்ற கோரியும் மனு கொடுக்கப்பட்டு, துறை ரீதியான நடவடிக்கைக்கு பரிந்துரை செய்யப்பட, அதனை எதிர்த்து வாதியானவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை தாக்கல் செய்யப்பட்டு, அதில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வாதியை மேற்படி சொத்தின் ஆக்கிரமிப்பாளராகவே கருதப்படவேண்டியவர். கடந்த 16.04.2021-ம் தேதியிட்ட அறிவிப்பு கொடுத்து ஆக்கிரமிப்பு அகற்றம் மேற்கொள்வதற்கு பிரதிவாதிக்கு சட்டப்படி உரிமையுள்ளதாலும் வாதியானவர் சுத்தமான கைகளுடன் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதாலும் மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என கோரியுள்ளார்.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில், ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4) மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர் அவரது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதால், மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

5) எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர் அவரது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

6) **தீர்வு :–**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர் / வாதியால் வழக்கு சொத்தினை பொறுத்து விளம்புகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட, மேற்படி அசல் வழக்கானது எழுவினா வனைவதற்காக நிலுவையில் இருந்து வருகிறது. வழக்கு சொத்தில் வாதிகள் கூறுவது போன்று தென்னை மரங்கள் மற்றும் தேக்கு மரங்கள் உள்ளதா? என்கின்ற சங்கதியையும், வழக்கு சொத்தானது நீர்பிடிப்பு பகுதியில் உள்ளதா? என்கின்ற சங்கதியையும் கண்டறிவதற்கு மேற்படி மனு சொத்தினை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகும். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவினை அனுமதிக்க வேண்டியதில்லை என தனியாக எதிருரை தாக்கல் செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் பெருமளவிலான வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை குறைப்பதற்கு ஏதுவாக இருக்கும். மனுதாரர் மனுவில்

கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகவும், நம்பத்தகுந்தவையாகவும் உள்ளது என்பதால் இம்மனுவினை அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

7) **முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திரு.C.தாமோதரன் என்பவர் (MS No.2574/2010) நியமனம் செய்யப்படுகிறார். மேற்படி நீதிமன்ற ஆணையர் இரு தரப்பினருக்கும் முறையாக அறிவிப்பு கொடுத்து, சர்வேயர் உதவியுடன் தரப்பினர்கள் முன்னிலையில் மனுச்சொத்தினை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையருக்கு ஊதியமாக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) என நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி தொகையை மனுதாரர் நேரடியாக நீதிமன்ற ஆணையரிடம் 7 தினங்களுக்குள் செலுத்தி அதற்கான குறிப்பாணையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்றும், மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வாய்தா : **19.06.2026.**

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.04.07 16:07:37 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர் தரப்பு சாட்சி :–** இல்லை.

**மனுதாரர் தரப்பு சான்றாவணம் :–**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | உத்தரவு – நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி :–** இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் :–** இல்லை.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.04.07 16:07:41 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.